உ

சிவமயம்.

தணிகாசலர்பேரில்

பஞ்சரத்தினம்

ஆறுமுகசுவாமிபேரில்

பஞ்சரத்தினம்

சண்முகக்கடவுள்பேரில்

பஞ்சரத்தினம்

இவைமூன்றும் அடங்கியிருக்கின்றன.

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

நெ-24, தாண்டவராயப்பிள்ளைவீதி.

கடவுள் துணை.

தணிகாசலர்பேரில்

பஞ்சரத்தினம்.

கணபதி துதி.

வித்தைதரும்புத்திதரும் வேதவிநாயகரை
சித்திதருமுன்புகழைசெப்புதற்கு-முத்திதரும்
அறுமுகன்மேல்யான்பாட வன்பாகமுன்வருவாய்க்
கரிமுககணபதியே காப்பு.

சீர்புகழும்சென்னைபுரி திருவல்லிக்கேணிநகர் செங்குந்தர்வீதிவாழும், சிவனருள்பாலனே சிவசுப்ரமணியனே சிவகாமிதவப்புதல்வனே, கார்புகழும்போரூரிலசுரர்குலம்வேறறக் கண்டித்தகதிர்வேலனே, கனகமயிலேறிவரும் தெய்வானைபாகனே கன்னிவள்ளிநேயனே, பார்புகழுமுனதன்ப ருள்ளங்களித்திட வந்துநீ பன்மைவரந்தந்தபரனே, பங்கயச்சிறைமீட்டி வைத்ததொருபாகனே பழனிமலைவடிவேலனே, தார்புகழுமாயனிட தங்கையுடமைந்தனே ஜெனகன்மகட்பதிமருமகனே, தகதவெனமயிலேறி திருநடனமாடிவருந் தணிகாசலக்கடவுளே. க

சித்திரவிநோதமுடன் திகழானசென்னியும் சிறப்பானபன்னிருகையும், திருமுடியில்மகுடமும் கட்டியும்பட்டமும் திருநீற்றுக்காப்புமழகும், இரத்தினக்

கடுக்கனும் புஜகீர்த்திபளபளென ரவிகைகண்டிதமார் பினில், ரஜித்திருமேனியு முச்சிதப்பூணூலும் இலட் சணமுகத்தினழகும், நெற்றியிற்றிலதமும் நிகநிகென வடிவேலும் நிறைந்தவொட்டியாணமழகும், நிகரான தண்மையும் நீலமயில்சேவலும் நின்பெருமைசொல்ல வெளிதோ, தத்திவருஞ்சூரனை துணித்துநீயமர்செய்த தயாபரமானதுரையே, தகதகனமயிலேறி திருநடன மாடிவருந் தணிகாசலக்கடவுளே. ௨

ஓராறுமுகமாட ஈராறுபுஜமாட வோங்குவடிவேலு மாட, வுச்சிதக்குண்டலமும்கச்சிதமுடியாடவொளியான சுட்டியாட, பாராளதண்டையும் பாதச்சிலம்பாடப் பணிந்திடும்பக்தராடப், பன்னிருகரமாட பணிந்தபூ ஷணமாட பவளவெண்குடைகளாடத், தோராதமயி லாடக் கோழித்துசமாடத் துலங்குநீர்க் காவியாட, தொண்டர்கள்முதலான சண்டிகேஸ்வரராடத் தொந் தனவவீரராட, தாராததவமுனிவர் தானுடநீயாடிதமி யனேன்முன்புவருவாய், தகதகனமயிலேறி திருநடன மாடிவருந் தணிகாசலக்கடவுளே. ௩

தந்தைதாய்தெய்வம் நீயேகதியில்லாமல் தற்காக்க வொருவரில்லை, தயிரியம்சொல்லவும் தாபமதுதீர்க்க வும் தரணியிலெவருமில்லை, சந்ததமுநால்வேத முன் னையேபுகழ்ந்து சரணகதியென்றவர்க்கு, சாலோகசா மீப சாரூபமேலான சாயுச்யந்தந்தகுருவே, வந்தனஞ்

செய்யுமுன தன்பார்க்கிறங்கிநீ வண்மையுடன்வரமளிப் பாய், வள்ளிதெய்வானையுடன் வாழுமயிலேறியே வர வேண்டுமெந்தனருகே, தந்திரமுகுந்ததிரு மாயனிட மருமகனே தற்பரானந்தபரனே, தகதகனமயிலேறி திருநடனமாடிவருந் தணிகாசலக்கடவுளே. ச

நஞ்சுண்டபரமகுரு வானதொருதெய்வமே நாத னேகுமரகுருவே, நாயகாயுனைவிட வேறுதுணையில்லை யென யாதரிப்பவருமில்லை, பஞ்சைமுந்நானென்ன பாவங்கள்செய்தனோபரதவித்திடவுநீதான், பாருதிரு ப்பதுந் தர்மமோயுன்னையினி பார்த்தவர்களேசார்க ளோ, கொஞ்சமென்றென்னைநீ விட்டுவிட்டாலுங் குழந்தைநான்விடுவதில்லை, கோபமோயென்மீதிற் றூப மோயென்செய்வேன் கொத்தடிமைகொண்டமுருகா, தஞ்சமென்றேயுனைக் கெஞ்சியேவருந்திடத் தற்காத் தருள்புரிகுவாய், தகதகனமயிலேறி திருநடனமாடி வருந் தணிகாசலக்கடவுளே. ரு

கண்ணிகள்.

என்னிரண்டுகண்ணேயிவ் வேழைபடுந்துன்பமெல்லா ம், பன்னிரண்டுகண்ணிருந்தும் பாராதிருந்தனையே
வேலுக்கரசே விடைக்கரசேநின்னருளாம்
பாலுக்கழுவேனைப் பார்த்துமிருந்தனையே
சத்திவேல்தான்பிடித்த சங்கரனார்தன்மகனே
பத்தியாயுனைப்பணிந்தும் பாராதிருந்தனையே.

உ

கடவுள் துணை.

ஆறுமுகசுவாமிபேரில் பஞ்சரத்தினம்.

திருவருளும் சென்னைபுரி தெய்வப்பிரகாசனே சிவகாமிபுதல்வனே, சிங்காரவேலனே கதிர்காமத்தையனே தெய்வானைகுணநேயனே, மருவுவலரணிகின்ற வள்ளிக்குகந்தனே வையாபுரித்தலைவனே, மயிலேறும் வீரனே சூரசம்மாரனே மாயவன்நல்மருகனே, தருவிற்பழுத்த கனிக்காகவொருநொடியிற் பூவலம்வந்த சத்துருசம்மாரதரனே, சங்கரிகொடியிடை தவத்தினூதித்திடுஞ் சரணக்குருகந்தனே, அருமையுடனே வருகுவாய்மயிலேறுமையனே கதிர்காமமுத்தையனே, ஆறுமுகமானதிரு நீறுவொளியானவருளாறுமுகமான குருவே. க

சங்கரன் தனக்குமிக வுபதேசஞ்சொல்லியே சகலருக்கமுர்த்திமீந்தாய், சாட்சாதிவேடர்கள் வள்ளியின் கொல்லையில் தனிவேங்கைமரமுமானாய், எங்கும்புகழாகவே யசுரரைச்சம்மரித்திந்திரனுக்குதவிசெய்தாய், ஏகாந்தமாகவே தென்பழனிபுரியினி லிடர்தீர்க்கவந்த முருகா, மங்களாகரமான தணிகைதிருப்போரூரில் வாழ்மயிலந்தனிலமர்ந்தாய், மனுநீதிதவறுதகோடான கோடிபேர் வணங்கினோர்க் குதவிசெய்த யங்கமுங்கலங்கியே நொந்துயான் தவிக்கும்வேளனே முன்புவரு

வாய், ஆறுமுகமானதிரு நீறுவொளியானவரு ளாறு
முகமானகுருவே. ௨

ஏதுமறியேனென்று மிணக்கமறியேன் சற்று
மிணையடிகள்போற்றவரியேன், எத்தேசகாலமும் பக்
தர்களைப்பூசித் திணக்கமுடன் தொழுதுமறியேன்,
சுத்தநிஷ்டை யறியேன்சற்றும் நிலைகண்டுபுகழவறி
யேன், நெடுநாளாயுன்கோவில் வலமாகவந்துநின் றுபூசி
த்துமறியேன், வேதமறியேன் நூல்விளக்கமறியேன்
பூரணவேதாந்த முடிவுமறியேன், வினைசெய்தபாவி
க்குதுணையாகநீவந்து வேண்டினவரந்தருகுவாய், ஆதி
வடிவே ராஜயோகவடிவேநித்ய யருளமுதமானகுரு
வே, ஐயனேயுன தன்பருக் கருள்தருவாய் ஆனந்தவடி
வேலனே, ஆறுமுகமானதிரு நீறுவொளியானவரு
ளாறுமுகமானகுருவே. ௩

ஏனோதான்நான்செய்த பாவவிதிகர்மமோ எளிய
னிடனோன்புலனோ, எண்ணாமல் முன்னோரைப்பே
சினகர்மமோ எளியோரைப்பழித்தவிதமோ, தானாக
பூமியில் வழக்கோரஞ்செய்தனோ சத்ராதிகோபமுறை
யோ, தாரணியில்கவிபாடும் புலவரைத்தடுத்தனோ
தாய்க்குபழியென்செய்தனோ, மானுசன்மிடும்மறையர்
குலைசெய்தனோ மங்கையர்கள் சாபமிதுவோ, மாரா
மல்முன்செய்த பாவத்தைநீக்கியே மைந்தர்க்குவரந்
தருகுவாய், ஆனாலுமெங்கள்முன்வருகுவாய்மயிலேறு

மையனேகதிர்வேலவா, ஆறுமுகமானதிருநீறுவொளி
யானவருளாறுமுகமான குருவே. ௪

வேலுமசைந்தாட வீரகிண்கிணியாட வெண்டை
யங்குலிங்கியாட, விதமானகாலினிற் றண்டைசிலம்பா
டவேதாந்தகுடைகளாட, நாலுமறைகள்பாடக்கோழி
த்துசமாட நாதாந்தப்பொருள்களாட, நாகரீகமான
தொரு வீரகண்டாமணிநடனமிடும் மயிலுமாட, பா
லர்கள்காவடிகள் கொண்டுபுகழ்ந்தாடப் பக்தர்கள்நட
னமாட, பாங்கானகாவிநீருடையாட சித்தர்கள்பணி
ந்துநிர்த்தனங்களாட, ஆலத்தையுண்டவன் புத்ரனே
மாபுரிஜயனார்வருகவருக; ஆறுமுகமானதிருநீறுவொளி
யானவருளாறுமுகமானகுருவே. ௫

திருப்போரூர்

சண்முகக்கடவுள் பஞ்சரத்தினம்.

ஆறுமுகன்காண் பன்னிருகண்ணன்காண் அழ
குவேலுடையவன்காண், ஏறுமயில்வாகனன்காண்எளி
யர்துயர்தீர்ப்பவன்காண் சண்முகவேலன்காண் சாமி
குருநாதன்காண், பேருபெரும்போரூர் புண்ணியன்
காண்பெம்மான்காண் என்னுளுமென்மனமுள்ளானே.

விண்ணவர் துயர்தீர்த்தவன்காண் வேதியனைச்
சிறையில் வைத்தவன்காண், பண்ணினார்ப்பாடுபவர்

பவமொழிப்பவன்காண் பக்தருளத்தித்திக்குஞ் செங்கனிகாண், பெண்ணொருத்தி யபயமென வந்தவன்காண் பேயோடாடுபவர் புதல்வன்காண், மண்ணுடர் தொழுதேற்றும் போரூர்மன்னவன்கா னென்னுளு னென்மனமுள்ளானே. உ

கன்னிகளிருவரை மணந்தவன்காண்கானகத்தில் வேங்கைமரமானவன்காண், தன்னிகரில்லாத் தயாபரன்காண், தந்தைக்கொரு மொழியுரைத்தவன்காண் சென்னிமலைவேலவன்காண், செங்கதிர் வேல்பிடித்த செல்வன்காண், இன்னுடர்தொழுதேற்றும் போரூரீசனிவன்கானெண்ணுளு மென்மனமுள்ளானே. ௩

செந்திற்பதிவாழுஞ் செங்கல்வராயன்காண் செங்கண்மால் மருமகன்காண், வந்துபணிவோர்க் கருள் தருபவன்காண் வானவர்கோமான்காண், பந்தப்பிறவியறுப்பவன்காண் பாவலர்க்குகந்தபரமன்காண், கந்தமணக்கும்போரூற்கற்பகங்கா ணென்னுளுமென்மனமுள்ளானே. ச

வஞ்சநெஞ்சகரை வதைப்பவன்காண் வாதாடுஞ் சூரரைவென்றவன்காண் தஞ்சமென்பாரிடர் தீர்ப்பவன்காண் தானவர்சிறைவிட்டவர்காண், நஞ்சுண்டகண்டர்க்குநாயகன்காண் நற்கீரார்பாடலுக் கியன்றவன்காண், சஞ்சலந்தீர்க்கும் போரூர் சரவணன்கா ணென்னுளுமென்மனமுள்ளானே. ரு

முற்றிற்று.